***DEPOSITION OF WITNESS***
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM**

**SC No.232/2023**

**PW: 4**

| | | | |
|---|---|---|---|
| Name : | திருமதி.கஸ்தூரி | Occupation: | கூலி |
| Husband Name : | திரு.ஜெயராமன் | Religion : | இந்து |
| Village : | தேனாம்படுகை | Age : | 40 |
| Taluk : | கும்பகோணம் | | |

Solemnly affirmed by Thiru.P.Sundar, Bench Clerk Gr.II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 06th day of December 2024.

Signature of Witness.

(All Accused Present. Additional Public Prosecutor Present. Defence counsel present. )

முதல் விசாரணை :

எனக்கு 3 குழந்தைகள் உள்ளன. நான் ஊரில் இல்லை. சண்டை நடந்த 2 நாட்கள் கழித்து தான் வந்தேன். சண்டை நடந்ததாக கூறினார்கள். எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(சாட்சி தனது குவிமுச 161 வாக்குமூலத்திலிருந்து பிறழ்ந்து சாட்சியம் அளித்துள்ளதால் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரினார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

ராஜ்குமாரை எனக்கு தெரியும். அவர் எனது தெருவில் தான் வசித்து வருகிறார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவம் நடந்த அன்று நான் சுவாமிமலையில் இருந்தேன். நான் தேனாம்படுகை காலனித்தெருவில் வசித்து வருகிறேன். சம்பவம் குறித்து ஊரே சண்டை என்று சொல்லிக்கொண்டார்கள். அஜித்திற்கும், ராஜ்குமாருக்கும் சண்டை என்று சொன்னார்கள். சண்டையில் என்ன நடந்தது என்று யாரும் கூறவில்லை. சண்டையில் யாருக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. 17.09.2021 அன்று இரவு 08.30 மணிக்கு சம்பவம் நடக்கும்போது சம்பவ இடத்தில் இருந்து சம்பவத்தை பார்த்தேன் என்றால் சரியல்ல. ராஜ்குமார் கையில் காயம்பட்டது எனக்கு தெரியும். கையில் கட்டு கட்டியிருந்ததை பார்த்தேன். ராஜ்குமார் தனக்கு கையில் எவ்வாறு காயம்பட்டது என்று கேட்டதற்கு சண்டை என்று தான் கூறினார். ஆஜர் எதிரி ஜெயக்குமார் அவரை அருவாளால் வெட்டும்போது ராஜ்குமார் தடுத்ததால் அவருக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் நான் பார்க்கவில்லை.

அஜித் ராஜ்குமாரின் தலையில் வெட்டினார் என்றால் அதை நான் பபார்க்கவில்லை. அய்யப்பன் ராஜ்குமாரின் முதுகில் உதைத்ததை நான் பார்க்கவில்லை. ஜெயக்குமாரின் மனைவி பெயர் வாசுகி. வாசுகி ராஜ்குமாரை சாவடிங்கடா என்று கூறியதை நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று நான் சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு, போலீசார் விசாரணையின்போதும் கூறிவிட்டு தற்சமயம் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளை காப்பாற்ற

வேண்டி நடந்த சம்பவத்தை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

இவ்வழக்கு சம்மந்தமாக நான் எதையும் பார்க்கவில்லை என்றாலும், எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரிதான். நான் ராஜ்குமாரிடமும் பேசுவேன், ஜெயக்குமாரிடமும் பேசுவேன். தற்சமயம் கூட இருவரிடமும் பேசுவேன். ராஜ்குமாருக்கு எவ்வாறு கையில் காயம்ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

மறு விசாரணை : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

D SHANMUGA PRIYA
Digitally signed by D SHANMUGA PRIYA
Date: 2024.12.06 18:55:44 +0530

*Chief Judicial Magistrate,*

*Thanjavur at Kumbakonam.*